

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (28.06.2024) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் இயங்கும், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையில் பணியாற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும், வாழ்த்துகளையும் வழங்கி, பயிற்சியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ஆர். சீதாலட்சுமி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் அமர் குஷ்வாஹா, மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.06.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக்கோரிக்கை (2024–25)ஐ முன்னிட்டு, சென்னை. மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

### பெரும்பாக்கத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவீர்!

# செங்கம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்துவீர்!

## சட்டப் பேரவையில் உறுப்பினர் மு.பெ.கிரி வலியுறுத்தல்!



**சென்னை, ஜூன் 30 -**

**பெரும்பாக்கத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் என்றும் செங்கம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்தி தர வேண்டும் என்று சட்டப் பேரவையில் செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி பேசுகையில் குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் உயர் கல்வி, பள்ளிக் கல்வி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி பேசியதாவது:-**

அறிவுலக ஆசான் பேரறிஞர் அண்ணா, தமிழ்நாட்டை உலக நாட்டோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற அளவிற்கு அனைத்து நிலைகளிலும் வளர்ச்சி தந்து, தமிழகத்தைச் செதுக்கிய சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். இந்தியத் திருநாட்டை, பாசிச பாதையில் சென்று கொண்டிருந்ததை, (குறுக்கீடு)

தேர்தல் ஜனநாயகத்தின்மூலம் ஜனநாயகப் பாதைக்கு வித்திட்ட பெரியாராய், பேரறிஞர் அண்ணாவாய், முத்தமிழறிஞர் கலைஞராய், எல்லோருக்கும் எல்லாமும் என்ற உன்னத கோஷத்தோடு. . . (குறுக்கீடு)

**தொடர் வெற்றி நாயகன்!**

திராவிட மாடல் ஆட்சியை செய்யும் தொடர் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் 50 ஆண்டுகாலம் திராவிட இயக்கக் கொள்கைகளை, தடம் மாறாமல், தான் சொன்ன வார்த்தைகளிலிருந்து பின்வாங்காமல் கொள்கைப் பிடிப்போடு, கழகத்தையும், தமிழ்நாட்டு மக்களையும் பாதுகாத்திடவும், நடைபெற்ற தேர்தல்களிலெல்லாம், நாளெல்லாம் சுற்றுப் பயணம் செய்து முதலமைச்சர் அவர்களின் 40க்கு 40 என்ற சொல்லை செயலாக்கிய, இளைஞர்களை ஈட்டி முனைகளால் தீட்டி வருகின்ற ஈடு இணையற்ற எங்கள் இளம் தலைவர் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டமன்றத்திலே நான் பேசுவதற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடத்திலும், முதலமைச்சர் அவர்களிடத்திலும் பரிந்துரை செய்து, என்னை சட்டமன்ற வேட்பாளராக்கி, உறுப்பினராக்குவதற்காக பாடுபட்ட பொதுப் பணித் துறை அமைச்சர் எங்கள் ஐயா அவர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு எப்போதும் அவையில் பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தி, இப்போதும் கூடுதலாகப் பேசுகின்ற வாய்ப்பைத் தரப் போகின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் செங்கம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்குப் பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை, வருவாய்த் துறையின் சார்பிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என் கருத்தைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியத் திருநாட்டிலேயே தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வியும் உயர் கல்வியும், விண்ணை முட்டுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறோம் என்று சொன்னால் திராவிட இயக்கத் தலைவர்கள் நூற்றாண்டுக் காலமாக கொண்டு வந்த திட்டங்கள். அது மதிய உணவுத் திட்டத்திலே சென்னை மாகாணத்தில் ஆரம்பித்து, சமூக நீதி என்று பேசுகின்றோம் அந்த சமூக நீதி, இட ஒதுக்கீட்டை இந்தியத் திருநாட்டிலே 69 சதவிகிதம் பெற்ற மாநிலமாக அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமூக நீதியின்மூலம் கல்வியைத் தந்து கட்டணமில்லாப் பள்ளிக் கல்வி, கட்டணமில்லா உயர் கல்வி, கட்டணமில்லா முனைவர் என்று அனைத்து நிலைகளிலும் கட்டணமில்லாக் கல்வியைத் தந்து கொண்டிருக்கின்ற திராவிட மாடல் அரசு, அதையும் தாண்டி சமூகத்திலே பெண் பிள்ளைகளைப் பெற்றால் சாதியைக் கடந்து, மதத்தைக் கடந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வைக் கடந்து பெண் பிள்ளைகள் என்றால் திருமணம் செய்வது கட்டாயம். ஆனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் கூடப் பேசத் தயங்குகிறார்கள். திருமண உதவித் திட்டம் நிறுத்திவிட்டதாகச் சொல்கிறார்கள்.

**பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்கான திட்டம்!**

தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருமண உதவித் திட்டம் வழங்கவில்லை. தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடுப்பெரிக்கும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று தடுக்கப்பட்ட பெண்பிள்ளைகளுக்கு 1989-1990 வாக்கிலே எட்டாவது வரை கூட படிக்காத பெண் பிள்ளைகளை பெற்றோர்களை பள்ளிக் கல்விக்கு அழைத்து வருவதற்காக திருமண உதவித் திட்டத்தின்மூலமாக தொடக்கக் கல்வியை ஆரம்பித்து வைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கும் நாமெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தொடக்கக் கல்வியைப் பெற்று விடுகிறார்கள். மேல்நிலைப் பள்ளி வரை பெண் பிள்ளைகள் வந்துவிடுகிறார்கள்.

ஆனால், உயர் கல்வியிலே என்ன நிலைமை? ஆனால், பெண் பிள்ளைகள் பத்தாவது அதிகம் தேர்ச்சி பெறுகிறார்கள். பன்னிரெண்டாவது அதிகம் தேர்ச்சி பெறுகிறார்கள். மாநிலத்திலே முதலிடத்திலே வருகிறார்கள். ஆனால், உயர் கல்வியைப் பெற முடியவில்லை. ஆனால், பெரியாரும், அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் உணர்ந்து தமிழ்நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் உணர்ந்தார். ஏன் இந்த இடைவெளி என்று உணர்ந்துதான் “புதுமைப் பெண்” என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இன்றைக்குத் தமிழ்நாட்டுப் பெண்பிள்ளைகளெல்லாம் உலகத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற உயர் கல்வியெல்லாம் நீங்கள் பெறுங்கள் என்று சொல்லி, ஆணுக்குப் பெண் சமமான உயர் கல்வியைத் தந்திருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோடானகோடி நன்றியினை - நானும் பெண் பிள்ளையைப் பெற்றவன் என்ற முறையிலே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டை வெல்ல முடியாது!**

உயர் கல்வியிலே இந்தியத் திருநாட்டிலே 100 பல்கலைக்கழகம் இருக்கிறது என்று சொன்னால், அதில் தமிழ்நாட்டிலே 6 இருக்கிறது. பல்கலைக்கழக எல்லாப் பிரிவுகளிலும் 100 பல்கலைக்கழகங்களிலே நம் மாநில பல்கலைக்கழகம் எட்டியிருக்கிறது. கலைக் கல்லூரிகளிலே என்று எடுத்துக் கொண்டால், 100 இடத்திலே நாம் 64 இடத்திலே இருக்கிறோம். அதிலும் மாநிலக் கல்லூரி தொடர்ந்து இந்தியாவிலேயே தொடர்ந்து 3 ஆண்டுகளாக மூன்றாவது இடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம். இதெல்லாம் எப்படிச் சாத்தியமென்று சொன்னால் இந்தியாவிலேயே இந்தத் திட்டங்களையெல்லாம் அரசுக்குத் தந்து மக்களுக்குத் தந்து திட்டங்களையும், சட்டங்களையும் தந்து முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு இன்றைக்கு உயர் கல்வி முதலில் இந்தியாவை விண்ணை முட்டுகின்ற இடத்திலே இருக்கிறது. எங்களிடத்திலே போட்டி போடுவதற்கு வேறு மாநிலமும் இல்லை. இந்தியாவை ஒட்டுமொத்தமாக ஆண்டு கொண்டிருக்கின்ற ஒன்றிய அரசும் இன்னும் 50 ஆண்டுகாலம் அல்ல, 100 ஆண்டுக்காலம் போட்டியிட்டாலும் தமிழ்நாட்டை உயர் கல்வியில் வெல்லப்போவதுமில்லை என்பதை இந்த நேரத்திலே பதிவிட நான் விரும்புகின்றேன்.

அதேபோன்று அரசுக் கல்லூரிகளிலே பயில்கின்ற மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட எண்ணற்ற திட்டங்கள் கட்டணமில்லாக் கல்வி, இட ஒதுக்கீட்டிலே அரசுப் பள்ளிகளிலே படித்தவர்களுக்கு 7.5, இப்படி எண்ணற்ற திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள் கல்வியை மட்டும் பெற்றுவிட்டு மாணவர்கள் எல்லாம் திறன் மேம்பாடு இல்லாமல், வெறும் பாடப் புத்தகங்களை மட்டும் படித்திருக்கிறார்கள் என்று சொல்லி, “நான் முதல்வன் திட்டத்தின்” மூலமாக அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் தனித்திறனை மேம்படுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்களிலே கலந்துகொள்ளச் செய்து இப்போது இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 12,753 மாணவர்கள் கலந்துகொண்ட முகாம்களிலேயே வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதுதான் உயர் கல்வியின் வளர்ச்சியிலே தமிழ்நாடு முதலிடத்திலே இருப்பதற்குக் காரணமாக அமைகிறது.

**அரசு கலை கல்லூரி அமைத்திடுவீர்!**

பெருந்தலைவர் காமராஜர் உட்கட்டமைப்புத் திட்டத்தின்மூலம் கல்லூரிகளுக்கு பல ஆண்டுகளாக கட்டப்படாத கட்டடங்களெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டதே செங்கம் தொகுதி. அது ஜவ்வாது மலை உச்சியிலே ஆரம்பித்து கல்வராயன் மலை உச்சியிலே முடிகிறது. வெறும் பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற இந்த இடத்தில் ஏறக்குறைய அரசுப் பள்ளிகள் 12 ஆம் வகுப்போடு 69 இருக்கின்றன. தனியார் பள்ளிகள் 11 இருக்கின்றன. மொத்தமாக ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஆண்டொன்றுக்கு தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால், நாங்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், திருவண்ணா மலைக்கு 80 கிலோ மீட்டரும், திருப்பத்தூருக்கு 80 கிலோ மீட்டரும், கிருஷ்ணகிரிக்கு 80 கிலோ மீட்டரும், அரூருக்கு 75 கிலோ மீட்டரும் செல்ல வேண்டும்.

ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று பக்கத்திலே உட்கார்ந்திருக்கின்ற ஐயா உயர் கல்வித் துறை அமைச்சருக்கு எனது தொகுதியைப்பற்றித் தெரியும். அதைத் தந்துவிட வேண்டுமென்று உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**குறு வட்டங்களை உருவாக்கிடுவீர்!**

வருவாய்த் துறையின் சார்பில் - கடந்த காலத்தில் வரலாறு காணாத சென்னையில் பெய்த மழை உங்கள் பகுதியைவிட, பேரவைத் தலைவர் இருக்கின்ற தென்புறங்களில் பெய்த மழையெல்லாம் மழை பெய்த சுவடே தெரியாமல் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மக்களுக்கு பணியாற்றிய இயற்கை பேரிடர் துறையினருக்கு பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் வட்டம் என்பது 1929லே தொடங்கப்பட்டு கட்டப்பட்ட கட்டடம்; அதற்குப் புதிதாக ஒரு கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்றும் கரியமங்கலம், பெருங்கொளத்தூர், மோத்தக்கல் பகுதியை தனித்தனியாகப் பிரித்து ஒரு குறு வட்டங்களை உருவாக்கித் தர வேண்டுமென்று அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறைக்கு இந்திய அரசியல் வரலாற்றிலே எந்த மாநிலத்திலும் ஒதுக்காத நிதி; தமிழ்நாடு அரசியல் வரலாற்றிலே எப்போதும் ஒதுக்காத நிதியை ஒதுக்கித் தந்து, மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள், பள்ளி உள்கட்டமைப்பு வசதிகள், பள்ளி மானியம், பள்ளி பராமரிப்பு, பாதுகாப்பு மேலாண்மை, உயர் தொழில்நுட்ப ஆய்வகம், திறன்மிகு வகுப்புகள், மாணவர்நலத்திட்டங்கள், விளையாட்டு மற்றும் கலைத்திறன் போட்டி, மாநில, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள், சதுரங்கப் போட்டிகள், கலையரங்கம், சிறார் திரைப்பட விழா, கோடை கொண்டாட்டம் போன்ற எண்ணற்ற பணிகளைத் தந்ததோடு. . . .

மாணவர்கள் சீரழியாமல் இருப்பதற்காக காலங்காலமாக நடத்தப்படாத கலைத் திருவிழாவை நடத்தி, பள்ளிக் கல்வித் துறை அத்துணை மாணவர்களும் தன் கலையை வெளிக்கொண்டு வருவதற்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையை வைத்து, உரையை நிறைவு செய்கின்றேன்.

**உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்துவீர்!**

நான் எதிர்க்கட்சியில் 5 ஆண்டுக்காலம் அமர்ந்திருந்தேன். இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இந்தப் பக்கம் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். நான் பிறந்து நான் படித்த பள்ளி பெரும்பாக்கம் ஊராட்சியிலே 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தந்தார்கள். அன்றையிலிருந்து இன்று வரை கேட்டுக் கொண்டிருக்கின்றேன். அந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதோடு, எங்கள் பகுதி மலைவாழ் மக்கள் அதிகமுள்ள பகுதி. நாராயணக்குப்பம், தண்டராம்பட்டு, சாத்தனூர் நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாகவும்,

பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் ரூபாய் 7,000 கோடிக்குமேல் பள்ளிக் கட்டடங்களை நூற்றாண்டு கட்டடங்களையெல்லாம் இடித்து, இன்றைக்கு புதிய கட்டடங்களைக் கட்டித் தந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்னும் எங்கள் பகுதியிலே பள்ளிக் கட்டடங்களின் தேவை இருக்கிறது. ஏனென்றால் கடந்த காலங்களில், தேவை நிறைவு பெறவில்லை. எங்கள் பள்ளிக் கட்டடங்களையெல்லாம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பு தந்த பேரவைத் தலைவருக்கு எனது நன்றியைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு மு.பெ.கிரி பேசினார்.



விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், தொரவி பனப்பாக்கத்தில், (பாகம் எண் 226) கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசி பெற்ற வேட்பாளர், அன்னியூர் சிவாவை ஆதரித்து, ஆற்றல்மிகு மாவட்டக் கழகச் செயலாளர், ஆருயிர் அண்ணன் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில், வெற்றியின் சின்னமாம் #உதயசூரியன் சின்னத்திற்கு பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகளுடன் வீடுவீடாகச் சென்று வாக்குகள் சேகரித்தோம். இந்நிகழ்வில், தொறவி பனப்பாக்கம் கிளைச்செயலாளர் பழனி, கிளைக்கழக நிர்வாகிகள் ஜெயச்சந்திரன், வீரபத்திரன்,BLA2 ராஜேஷ்,BLC மணிகண்டன்,மகளிரணி ராதிகா, சுதா, வானூர் ஒன்றிய நிர்வாகிகள் வாசு, ராஜேஷ், சதீஷ் உள்ளிட்ட உள்ளூர் நிர்வாகிகளும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக பொருளாளர், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் லியாகத் அலி, மாநிலத் தொண்டரணி துணைச் செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப சரவணன், மாவட்டத் துணைச் செயலாளர் SS கருப்பையா, பொதுக்குழு உறுப்பினர் எட்வர்ட் சந்தோஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் SVR ஸ்டாலின், தகவல் தொழில் நுட்ப அணி விராலிமலை தொகுதி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சதீஷ், சந்தானம், விராலிமலை நாகராஜ், சுரேஷ், ராஜேஷ்,ஆனந்த் உள்ளிட்ட புதுக்கோட்டை வடக்கு மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பணியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உத்தரவுப்படி மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாவட்டத் துணைச் செயலாளர் நாகராஜன் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் சோழாம்பூண்டி, சோழனூர் ஆகிய ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று தீவிர பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்.